DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge`s Sankarankovil )
MCOP.No. 64/2019
******

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | : பிரபாகரன் என்ற மோகன் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 02.01.2020 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of.

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

சாட்சி இன்றைய தினம் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, முதல் விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார்.

நான் 2 ஆம் மனுதாரர். எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண ஆணை உறுதி ஆவணமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண ஆணை உறுதி ஆவணம் எனது தகவலின் பேரில் தான் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். வழக்கு விபத்து சம்மந்தமாக சின்னக்கோவிலான்குளம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட கு.எண்.14/2017க்கான முதல் தகவல் அறிக்கையின் நீதிமன்ற சான்று நகல் ம.சா.ஆ.1. விபத்தில் இறந்து போன என்னுடைய தாயார் சரஸ்வதி என்பவரின் பிரேத கூறாய்வு சான்றின் நீதிமன்ற சான்று நகல் ம.சா.ஆ.2. விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு தயார் செய்யப்பட்ட பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றின் நீதிமன்ற சான்று நகல்கள் ம.சா.ஆ.3 வரிசை. விபத்தை உண்டாக்கிய டி.என்.76 க்யூ 3434 என்ற எண்ணுடைய இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நீதிமன்ற சான்று நகல் ம.சா.ஆ.4. மேற்படி குற்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் நீதிமன்ற சான்று நகல் ம.சா.ஆ.5. என்னுடைய தாயார் சரஸ்வதியின் இறப்பு சான்று ம.சா.ஆ.6. வாரிசு சான்று ம.சா.ஆ.7. என்னுடைய

மற்றும் என்னுடைய தகப்பனார் மற்றும் சகோதரரின் ஆதார் அட்டையின் நகல்கள் தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ.8 வரிசை. என்னுடைய தாயார் சரஸ்வதியின் ஆதார் அட்டையின் நகல் தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ.9. என்னுடைய தகப்பனாரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க சான்று நகல் ம.சா.ஆ.10. என்னுடைய வங்கி கணக்கின் சான்று நகல் ம.சா.ஆ.11. என்னுடைய சகோதரரின் வங்கி கணக்கின் சான்று நகல் ம.சா.ஆ.12. மனுப்படி உத்தரவிட கேட்டுக் கொள்கிறேன்.